# நாமும் நபிகள் நாயகமும்....

மௌலானா M. ஷேக் அப்துல்லாஹ் ஜமாலீ M.A.,

முதல்வர் கைருல் பரிய்யா மகளிர் அரபுக்கல்லூரி, சென்னை

اَلنَّبِيُّ اَوْلٰى بِالْمُؤْمِنِيْنَ مِنْ اَنْفُسِهِمْ (33 : 6)

அல்லாஹ்வின் திருத்தூதரான நபி அவர்கள் முஃமின்களுக்கு அவர்களின் உயிர்களைவிடவும் மேலானவர்களாக இருக்கிறார்கள். (அல்குர்ஆன் 33 : 6)

இவ்வசனத்தின்மூலம் பயனுள்ள பல பாடங்களை அல்லாஹ் நமக்கு சொல்லித் தருகிறான்.

தன்னை ஒரு முஃமின் என்று பறை சாற்றிக் கொள்ளும் ஒவ்வொருவரும் தன்னுடைய உயிரைவிடவும் உயர்ந்தவர்களாக நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை மதிக்க வேண்டும்.

அவ்வாறு மதிக்காதவன் உண்மையான முஃமின் அல்ல.

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் நம்மைப் போன்றவர்களல்ல. நமது உயிரைவிடவும் உயர்ந்தவர்கள்.

ஆனால் நம்மிலே புறப்பட்டிருக்கிற ஒரு கூட்டம் நன்றாய் கதை அளந்து கொண்டிருக்கிறது. முஸ்லிம்களின் உள்ளங்களில் விஷவிதைகளை தூவப்பார்க்கிறது. அவற்றில் ஒன்று.

நபிகள் நாயகம் (ஸல்) நம்மைப் போன்றவர்களே.

இதைக் கூறுகின்றபோது அவர்களின் தொனியில் அலட்சியம் தென்படுகிறது.

இதைக் கேட்கின்ற உண்மையான முஃமின் உள்ளம் புண்படுகிறது.

இந்த அபத்தமான கூற்றிற்கு நாம் பதில் சொல்லத் தேவையில்லை. நபிகள் நாயகம் (ஸல்) அவர்களே பதில் கொடுத்துவிட்டார்கள்.

உங்களில் யாரும் என்னைப் போன்றில்லை.
அறிவிப்பாளர் : அபூஹுரைரா (ரலி), நூல் : புகாரீ, முஸ்லிம்.

**ஒருவர் மரணித்துவிட்டால் அவர் விட்டுச் செல்கிற சொத்தில் அவருடைய வாரிசுக்குப் பங்குண்டு. நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மறைந்த பின்பு அவர்கள் விட்டுச் செல்கிற சொத்தில் பங்கில்லை என்பதன்மூலம் உள்ளங்கை நெல்லிக்கனியாக ஒரு கருத்தை புரிந்து கொள்ள முடிகிறது; அது, நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மரணிக்கவில்லை என்பதேயாகும்.**

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இவ்வாறு கூறியது யாரைப் பார்த்து?
ஸஹாபா பெருமக்களைப் பார்த்து.

ஸஹாபா பெருமக்கள் யார்?

நபிமார்களுக்கு அடுத்த மனித சமுதாயத்தில் மிகச் சிறந்தவர்கள் என்ற பெருமைக்குரியவர்கள்.

இவர்களைப் பற்றி இறைவன் கூறுவதாவது :

رَضِيَ اللهُ عَنْهُمْ وَرَضُوا عَنْهُ. (98 : 8)

இறைவன் இவர்களைப் பொருந்திக் கொண்டான். இவர்களும் இறைவனைப் பொருந்தினார்கள். (அல்குர்ஆன் 98 : 8)



இத்தனை சிறப்பும், உயர்வும், பெற்றுள்ள ஸஹாபா பெருமக்களே நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைப் போன்றில்லை என்கிறபோது, தற்போது புறப்பட்டிருக்கிற இக்கூட்டம் எம்மாத்திரம்?

நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கும் நமக்குமிடையே இருக்கின்ற வேறுபாடுகள் ஏராளம்.

அதற்குண்டான ஆதாரங்கள் தாராளம்.

மார்க்கச் சட்ட திட்டங்களில் இருக்கின்ற வேறுபாட்டை மாத்திரம் இன்ஷா அல்லாஹ் இக்கட்டுரையில் காண்போம்.

உளூவை முறிப்பவைகளில் படுத்துறங்குவதும் ஒன்றாகும். நம்மிலே ஒருவர் உளூ செய்துவிட்டு, படுத்துறங்கி, பின்பு விழித்தெழுந்து தொழ விரும்பினால் மறுபடியும் உளூ செய்ய வேண்டும். காரணம் அவர்படுத்துத் தூங்கியதால் உளூ முறிந்து போய்விட்டது.

நபிகள் நாயகம் (ஸல்) கூறினார்கள்

படுத்துறங்கியவன் (தொழ விரும்பினால்) உளூ செய்து கொள்வது கட்டாயமாகும்.

அறிவிப்பாளர் : இப்னு அப்பாஸ் (ரலி) நூல்: திர்மிதீ, அபூதாவூத்

ஆனால் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் படுத்துறங்கினால் அவர்களின் உளூ முறிந்துபோகாது.

ஆயிஷா (ரலி) அறிவிக்கிறார்கள். நான் அல்லாஹ்வின் திருத்தூதர் (ஸல்) அவர்களிடம் யாரஸூலல்லாஹ் தாங்கள் படுத்துறங்கி விழித்தபின் (உளூ செய்யாமல்) வித்ரு தொழுகிறீர்களே என்று கேட்டேன். அதற்கு அல்லாஹ்வின் திருத்தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

(ஆயிஷா! எனது இரு கண்கள் தான் உறங்குமே தவிர எனது கல்பு உள்ளம் உறங்காது) நூல் : புகாரீ.

ஒருவர் வசதி வாய்ப்பும், நீதமாய் நடந்து கொள்ளும் தன்மையும் பெற்றிருந்தால் நான்கு பெண்கள் வரை திருமணம் செய்து கொள்ள அனுமதியுண்டு.

உங்களுக்குப் பிடித்தமான பெண்ணை மணந்து கொள்ளுங்கள் இரண்டிரண்டாகவோ, மும்மூன்றாகவோ, நன்னான்காகவோ, ஆனால் நீங்கள் இவர்களிடையே நியாயமாக நடக்க முடியாது என்று பயந்தால் ஒரு பெண்ணையே (மணந்து கொள்ளுங்கள்) அல்குர்ஆன் 4 : 3

நம்மில் ஒருவருக்கு வசதியும் நீதமும் எவ்வளவுதான் அளவு கடந்து இருந்தாலும் நான்கு பெண்களுக்கு மேல் திருமணம் செய்யக் கூடாது.

ஆனால் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஒரே கட்டத்தில் 9 மனைவியருக்குக் கணவராக இருந்தார்கள்.
இப்னு அப்பாஸ் (ரலி) அவர்கள் கூறினார்கள்.

அல்லாஹ்வின் திருத்தூதர் (ஸல்) அவர்கள் இவ்வுலகை விட்டும் மறைந்த போது அவர்களுக்கு ஒன்பது மனைவியர் இருந்தார்கள். நூல் : புகாரீ, முஸ்லிம்

### திருமணத்தில் சாட்சி

நம்மில் திருமண நிகழ்ச்சி நடைபெறுமிடத்தில் இரண்டு சாட்சிகள் கட்டாயம் இருக்க வேண்டும். அப்போதுதான் திருமணம் நிறைவேறும் சாட்சிகள் இல்லாவிட்டால் திருமணம் கூடாது. நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் சொன்னார்கள்: சாட்சிகள் இல்லாத திருமணம் செல்லாது. (நூல் : தாரகுத்னீ)

ஆனால், நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய திருமணம் சாட்சிகள் இல்லாமலேயே நிறைவேறிவிடும்.

அவர்களிடம் ஒரு பெண்மணி வந்து, யாரஸூலல்லாஹ் உங்களை நான் திருமணம் செய்து கொள்ள விழைகிறேன். திருமணத்தின்மூலம் தங்களுக்கு என்னை அர்ப்பணம் செய்து விட்டேன் என்று இதற்குச் சம்மதம் தெரிவித்துவிட்டால் திருமணம் நிறைவேறிவிடும் சாட்சிகள் தேவையில்லை.

يَآَيُّهَا النَّبِىُّ اِنَّا اَحْلَلْنَالَكَ اَزْوَاجَكَ
الّٰتِىْ اٰتَيْتَ اُجُوْرَهُنَّ وَمَامَلَكَتْ يَمِيْنُكَ
(٣٣ : ٥٠)

முஃமினான ஒரு பெண் நபி அவர்களுக்குத் தன்னை அர்ப்பணித்து கொள்ள விரும்பினால் (திருமணம் நிறைவேறிவிடும். நபியே! இது) உமக்கு மட்டும் (வழங்கப்பட்ட) உரிமை. மற்ற முஃமின்களுக்கு அல்ல.
அல்குர்ஆன் 33 : 50

உங்களுக்கு மட்டும்தான் மற்ற முஃமின்களுக்கல்ல என்று சொன்னதின்மூலம் அல்லாஹ் ஒரு கருத்தைத் தெளிவாக்கிக் காட்டுகிறான். அது நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மற்றவர்களைப் போல அல்ல.

### கணவனின் மரணத்திற்குப் பின் பெண்ணின் திருமணம்

ஒருவருக்கு மனைவியாக இருக்கும் பெண்ணை யாரும் திருமணம் செய்து கொள்ளக்கூடாது. பிரிவு ஏற்பட்டுவிட்டால் திருமணம் செய்து கொள்ள அனுமதியுண்டு.

### தலாக் கூறுவதன் மூலம் பிரிவு
### மரணத்தின் மூலம் பிரிவு

ஒரு பெண்ணின் கணவர் அவளை தலாக் சொல்லிவிட்டால் ஹனஃபீ மத்ஹபின்படி மூன்று மாதவிடாய் காலங்கள், ஷாஃபியீ மத்ஹபின் படி மூன்று தூய்மைக்காலங்கள் அவள் இத்தாவில் இருக்க வேண்டும்.

وَالْمُطَلَّقٰتُ يَتَرَبَّصْنَ بِاَنْفُسِهِنَّ ثَلٰثَةَ قُرُوْٓءٍ
(٢٢٨ : ٢)

தலாக் சொல்லப்பட்ட பெண்கள் தங்களுக்கு மூன்று குர்வுகள் (அதாவது மூன்று மாதவிடாய்கள் அல்லது மூன்று தூய்மையான காலங்கள்) ஆகும் வரை பொறுத்திருக்க வேண்டும். (அல்குர்ஆன் 2 : 228)

இத்தாவின் காலங்கள் முடிவடைந்த பின்னால் தடை செய்யப்படாத எவரும் அப்பெண்மணியை திருமணம் செய்து கொள்ள அனுமதி உண்டு. பெண்ணின் கணவர் மரணமடைந்துவிட்டால் நான்கு மாதங்கள் பத்து நாட்கள் அவள் இத்தாவில் இருக்க வேண்டும்.

உங்களில் எவரேனும் மனைவியரை விட்டு மரணித்தால் அம்மனைவியர் நான்கு மாதங்கள் பத்து நாட்கள் பொறுத்திருக்க வேண்டும். (அல்குர்ஆன் 2 : 234)

இத்தாவின் காலங்கள் முடிவடைந்தபின் தடை செய்யப்படாத எவரும் திருமணம் செய்து கொள்ள மார்க்கம் அனுமதிக்கிறது.

ஆனால் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மறைவிற்குப் பின்னால் அவர்களின் துணைவியர் எவரையும் திருமணம் செய்து கொள்வதற்கு யாருக்கும் அனுமதியில்லை என்று இறைமறை இயம்புகிறது.

ذٰلِكُمْ اَطْهَرُ لِقُلُوْبِكُمْ وَقُلُوْبِهِنَّ. وَمَا كَانَ لَكُمْ اَنْ
تُؤْذُوْا رَسُوْلَ اللهِ وَلَآاَنْ تَنْكِحُوْٓا اَزْوَاجَهٗ مِنْ بَعْدِهٖ
اَبَدًا اِنَّ ذٰلِكُمْ كَانَ عِنْدَاللهِ عَظِيْمًا (33 : 53)

அல்லாஹ்வின் தூதரை நோவினை செய்வது உங்களுக்கு ஆகுமானது அல்ல. அன்றியும் அவருடைய மனைவியரை அவருக்குப் பின்னர் நீங்கள் மணப்பது ஒரு போதும் கூடாது. நிச்சயமாக இது அல்லாஹ் இடத்தில் மிகப்பெரும் (பாவ) காரியமாகும். (அல்குர்ஆன் 33 : 53)

### உயிருடன் இருக்கும் ஒருவரின் மனைவியை திருமணம் செய்து கொள்ளக் கூடாது

நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மறைவிற்குப்பின்னும் அவர்களின் துணைவியரை திருமணம் செய்து கொள்ளக்கூடாது என்று அல்லாஹ் தடை செய்யதின்மூலம் நமக்கு ஒரு கருத்து தெளிவாகத் தெரிகிறது. அது நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மறைந்த பிறகும் உயிருடன் தான் இருந்து வருகிறார்கள்.

### தஹஜ்ஜுத் தொழுகை

ஒரு நாளைக்கு ஐந்து நேரத் தொழுகைகள் நமக்கெல்லாம் கடமை. ஆனால் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு ஐந்து நேரத் தொழுகைகளோடு இன்னொரு தொழுகையும் கடமை. அது தஹஜ்ஜுத் தொழுகை.

وَمِنَ اللَّيْلِ فَتَهَجَّدْ بِهِ نَافِلَةً لَّكَ عَسَى
اَنْ يَّبْعَثَكَ رَبُّكَ مَقَامًا مَّحْمُوْدًا
(١٧ : ٧٩)

இன்னும் இரவில் (ஒரு சிறு) பகுதியில் உமக்கு (ஐந்து நேரத் தொழுகைகளை விடவும்) அதிகப்படியாக தஹஜ்ஜுத் தொழுகையை தொழுது வருவீராக! (இதன் பாக்கியத்தால்) உம்முடைய இறைவன் மக்காமம் மஹ்மூதா என்னும் புகழ்பெற்ற தளத்தில் உம்மை எழுப்பப்போகும். அல்குர்ஆன் 17 : 79

நம்மிலே ஒருவர் இறந்துவிட்டால் அவர் விட்டுச் செல்கின்ற சொத்தில் அவருடைய வாரிசுகளுக்கு உரிமை உண்டு. அவரவர்களுக்குரிய அளவின்படி பங்கு போட்டுக் கொள்வார்கள். ஆனால், நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் விட்டுச் சென்ற பொருளில் அவர்களின் வாரிசுகளில் எவருக்கும் உரிமையில்லை. எந்தப் பங்கும் இல்லை. அந்தப் பொருள் எல்லாமே மக்களின் பொதுவுடமையாகும்.

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் சொன்னார்கள். நாம் யாரையும் வாரிசாக்கவில்லை. நாம் விட்டுச் செல்கிற பொருள்கள் யாவும் மக்களின் பொதுச் சொத்தாகும். அறிவிப்பாளர் : அபூபக்ர் (ரலி), நூல் : புகாரீ, முஸ்லிம்

ஒருவர் மரணித்துவிட்டால் அவர் விட்டுச் செல்கிற சொத்தில் அவருடைய வாரிசுக்குப் பங்குண்டு. நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மறைந்த பின்பு அவர்கள் விட்டுச் செல்கிற சொத்தில் பங்கில்லை என்பதன்மூலம் உள்ளங்கை நெல்லிக்கனியாக ஒரு கருத்தை புரிந்து கொள்ள முடிகிறது. அது நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மரணிக்கவில்லை. நம் பார்வைக்கு மட்டுமே மறைந்திருக்கிறார்கள்.

### மனைவிக்கு உணவும், உடையும்

ஒருவர் உயிருடன் இருக்கும்போது தன் மனைவிக்குத் தேவையான உணவும், உடையும், கொடுப்பது கட்டாயக் கடமை. ஆனால் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மறைந்த பின்பு அவர்கள் விட்டுச் சென்ற சொத்திலிருந்து அவரின் துணைவியருக்குத் தேவையான உணவும், உடையும் அத்துணைவியரின் வாழ்நாள் முழுவதும் வழங்கப்பட வேண்டும்.

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள். எந்தவொரு தங்கக் காசையும் எனது வாரிசுகள் பங்கு போட்டுக் கொள்ளக் கூடாது. நான் விட்டுச் செல்கிற பொருளிலிருந்து என் மனைவியருக்கு உணவும், உடையும் என் கலீஃபாவுக்கு ஊதியமும் கொடுக்கப்பட வேண்டும். மிஞ்சிய பொருள்மக்களின் பொதுவுடமைச் சொத்தாகும்.

*அறிவிப்பாளர் : அபூஹுரைரா (ரலி), நூல் : புகாரீ முஸ்லிம்*

உயிருடன் இருப்பவர் மனைவிக்குரிய செலவை ஏற்றுக் கொள்ள வேண்டும். நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இவ்வுலகை விட்டும் மறைந்த பின்னரும் கூட அவர்களின் மனைவியருக்குரிய செலவை ஏற்றுக் கொண்டார்கள் என்ற காரணத்தால் ஒரு விஷயம் வெள்ளிடை மலையெனத் தெரிகிறது அது நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மறைந்தாலும் உயிருடன் தான் இருந்து கொண்டிருக்கிறார்கள்.

நமக்கும் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கும் இடையேயுள்ள வேறுபாடுகள் சிலவற்றை மேலே கண்டோம். நாம் கண்ட வேறுபாடுகள் மார்க்க சட்ட திட்டங்களை மட்டும்தான். அப்படியானால், உயர்வு, சிறப்பு, படித்தரம், இறைநேசம், இறை நெருக்கம் இவற்றிலுள்ள வேறுபாடுகள்? வார்த்தைகளால் வடித்துவிட முடியாது. எழுதி முடித்துவிட முடியாது. ஆகவே, நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் நம்மைப் போன்றவர்கள் அல்ல. நமது உயிரினும் மேலானவர்கள் இந்த நபியவர்கள் முஃமின்களுக்கு அவர்களின் உயிர்களைவிடவும் உயர்ந்தவர்களாக இருக்கிறார்கள்.

(அல்குர்ஆன் 33 : 6)